**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

# D011 பண்டைய இலக்கியம்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. குறிஞ்சித் திணையைப் பாடியதால் சிறப்புப் பெற்ற புலவர் யார்?
2. பாலை பாடிய புலவர் எனப் புகழப்பட்டவர் யார்?
3. சிவன் தருமிக்குப் பொற்கிழியை வாங்கித் தருவதற்காகப் பாடிய பாடல் எது?
4. கபிலரின் நண்பர் யார்?
5. மடல் பாடுவதில் வல்லவர் யார்?
6. நெய்தல் நிலத்திற்குரிய நிலம் எது?
7. 'ஆடிப்பாவை' எனப் பரத்தை யாரைக் குறிப்பிடுகிறாள்?
8. ஐங்குறுநூறு எத்தனை பாடல்களைக் கொண்டுள்ளது?
9. ஐங்குறுநூற்றுப் பாடல்களின் சிற்றெல்லை பேரெல்லை யாது?
10. மருத நிலத்திற்குரிய கருப்பொருள்களுள் உள்ளுறை உவமையாகக் கூறப்படுவதில் ஒன்றினைக் குறிப்பிடுக.
11. அகநானூற்றின் வேறு பெயர் யாது?
12. சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் யார்?
13. பொருநராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் யார்?
14. கூத்தராற்றுப்படையின் வேறு பெயர் என்ன?
15. பதிற்றுப்பத்தில் இடம் பெற்ற அரசர்கள் எம் மரபினர்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கபிலர் – குறிப்பு வரைக.
2. வரைவு கடாதல் என்றால் என்ன?
3. தலைவனின் காதல் சிறப்பைக் குறுந்தொகைத் தலைவி எவற்றோடு ஒப்பிடுகிறாள்?
4. சங்க இலக்கியத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
5. ஐங்குறுநூற்றுப் புலவர்கள் யாவர்?
6. அகநானூறு – குறிப்பு வரைக.
7. பத்துப்பாட்டு நூல்கள் எவை?
8. பதிற்றுப்பத்து – பெயர்க் காரணம் தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. அ. காதலை விதந்து போற்றும் குறுந்தொகைப் பாடல்கள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ. ஐங்குறுநூற்றில் இடம் பெற்ற மருத நிலப் பாடல்களின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

2. அ. ஐவகை நிலங்களுக்குரிய முதல், உரி, கருப்பொருட்களை அட்டவணைப்படுத்துக.

(அல்லது)

பத்துப்பாட்டு நூல்களை அட்டவணைப்படுத்துக.

3. அ. 'தசும்பு துளங்கு இருக்கை' என்ற பரணரின் பதிற்றுப்பத்து பாடலின் பொருளை விளக்கி வரைக.

(அல்லது)

ஆ. பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் போற்றும் புறநானூற்றுப் பாடலை விளக்குக.

***